நாள்:01.08.2023

STC 811/2017

புசா.1

பெயர் :ரத்தினக்குமார்

த/பெ.பொன்னுச்சாமி

(Accused absent. Petition u/s.317 Cr.P.C., filed and allowed)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. எதிரிக்கு உடன் பிறந்த ஒரு சகோதரர் உள்ளார். எதிரியின் தந்தை எனக்கு நல்ல பழக்கம். புசாஆ 3 ஐ நான் அனுப்பினேன் என்றால் சரிதான். புசாஆ 3 ஐ எதிரி பெற்றுக்கொண்டு 07.11.2016 அன்று எதிரியின் வழக்கறிஞர் என் வழக்கறிஞருக்கு பதில் அறிவிப்பு புசாஆ 7 அனுப்பியிருந்தார் என்றால் சரிதான்.

2. புசாஆ 7ல் காசோலை மற்றும் புரோ நோட்டின் நகலை வழக்கறிஞர் கேட்டிருந்தார் என்றால் சரிதான். அதற்கு எனது வழக்கறிஞர் மேற்படி புரோ நோட் மற்றும் காசோலையின் நகல்களை 16.11.2016 அன்று அனுப்பி வைத்திருந்தார் என்றால் சரிதான். நான் புகாருடன் தாக்கல் செய்திருந்த புரோ நோட்டின் நகலைதான் எனது வழக்கறிஞர் எதிரியின் வழக்கறிஞருக்கு அனுப்பி வைத்திருந்தார் என்றால் சரிதான். ஆனால் அது குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3. எதிரி கீதா என்பவர் 1ம் எதிரி நிறுவனத்திற்காக 1ம் எதிரி நிறுவனத்தின் வியாபார தேவைக்காக கடன் பெற்றிருந்ததாக எனது சட்ட அறிவிப்பு, புகார், எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2ம் எதிரி 1ம் எதிரி நிறுவனத்திற்காக எந்த கடனும் பெறவில்லை என்றாலும், அவ்வாறு பெற்றிருந்தால் அதன் விபரத்தை எழுதி புரோ நோட் கொடுத்திருப்பார் என்றாலும் சரியல்ல.

4. 20.12.2015 அன்று எதிரி என்னிடம் கடன் கேட்டதாகவும், 25.12.2015 அன்று நான் எதிரிக்கு ரூபாய் 7 லட்சம் கடன் கொடுத்தாகவும், அன்றைய தேதியிலேயே எதிரி பிராமிசரி நோட் கொடுத்ததாக எனது சட்ட அறிவிப்பில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் புகாரிலும் மேற்படி விபரத்தைதான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் என் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் 25.12.2015 அன்று என்வீட்டில் வைத்து எதிரிக்கு கடன் கொடுத்ததாகவும், அதே தேதியில் எதிரி எனக்கு புரோ நோட்டு எழுதிக்கொடுத்தாகவும் முதலில் குறிப்பிட்டுவிட்டு பிறகு

மீண்டும் மேற்படி 25.12.2015 என்ற தேதியை கையால் அடித்துவிட்டு 20.12.15 என்று திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5. என் புகாரில் 25.12.2015 தேதியிட்ட பிராமிசரி நோட்டு என்றுதான் ஆவண பட்டியலில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் புகார் தாக்கல் செய்த சமயத்தில் அதனுடன் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் 25.12.2015 தேதியிட்ட பிராமிசரி நோட்டு என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் புகாரில் பூபதி என்பவரை சாட்சியாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

6. நான் எதிரிக்கு அனுப்பிய பிராமிசரி நோட்டில் எழுதியது என்று குறிப்பிட்டு பூபதி என்பவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி புரோ நோட்டு நகலில் 20.12.2015 என்றுதான் பிராமிசரி நோட்டு எழுதப்பட்ட தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் அடிப்படையில்தான் புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. 25.12.2015 அன்று என்னிடம் எதிரி பெற்ற கடனுக்காகதான் எதிரி எனக்கு காசோலை கொடுத்ததாக சட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள சட்ட அறிவிப்பை அனுப்புவதற்கு முன்பாக எதிரியிடம் பல முறை கடனை திருப்பி கேட்டதாக நான் கூறியுள்ள பட்சத்தில் அதற்காக சட்ட அவிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. ரூபாய் 7 லட்சம் அசல் தொகை என்று புகாரில் குறிப்பிட்டுவிட்டு ரூபாய் 5 லட்சத்திற்குதான் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. மீதி தொகையை 3 மாத காலத்தில் எதிரி தருவதாக ஒப்புக்கொண்டார் என்று புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வரவேண்டிய கடனுக்காக சிவில் வழக்கு எதுவும் காசாலை மற்றும் புரோ நோட்டை வைத்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு நான் யார் என்று நேரடியாக தெரியாது என்றாலும், நான் எதிரியின் குடும்ப நண்பர் என்று கூறுவது பொய் சங்கதி என்றாலும் சரியல்ல.

9. புரோ நோட்டு எதுவும் எதிரி எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் பெறவில்லை என்றாலும், அதற்காக காசோலை எனக்கு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. செந்தில்வேல் என்ற சமையல்

கான்ட்ராக்டர் மற்றும் பைனான்சியர் எனக்கு தெரியும். அவரது தகப்பனார் பெயர் சின்னசாமி ஆகும். மேற்படி செந்தில்வேல் என்பவரிடம் எதிரியின் தந்தை சண்முகவேல் என்பவர் கடன் பெற்றிருந்தார் என்றாலும், மேற்படி கடனை செலுத்துவதற்கு முன்பே சண்முகவேல் இறந்துவிட்டார் என்றாலும், மேற்படி கடனை செலுத்துவதற்கு எதிரி ஒப்புக்கொண்டார் என்றாலும், அதற்காக எதிரி தனது காசோலைகளான விஜயா வங்கி எண்கள் 948630 முதல் 948634 வரை மொத்தம் 5 காசோலைகளை சங்கதிகள் நிரப்பாமல் கையொப்பம் மட்டும் இட்டு செந்திலிடம் கொடுத்து வைத்திருந்தார் என்றாலும், அதேபோன்று 5 பிராமிசரி நோட்டுகளை சங்கதிகள் நிரப்பாமல் கையொப்பம் மட்டும் இட்டு செந்தில்வேலிடம் கொடுத்து வைத்திருந்தார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

10. மேற்படி கடனில் எதிரி பகுதி தொகையை மேற்படி செந்தில்வேலுக்கு செலுத்திவிட்டார் என்றாலும், மீதி தொகைக்கு அவரது நண்பரான குளத்துபுதூரை சேர்ந்த ராமசாமி கவுண்டர் மகன் மருதாச்சலம் என்பவர் பெயருக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தை எதிரி ஏற்படுத்திக்கொடுத்திருந்தார் என்றால் சரிதான்.

11. எதிரி கடன் தொகையை செலுத்திய பிறகு 07.04.2016 அன்று மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் ஆனைமலை சார் பதிவாளர் அலவலத்தில் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவண ரத்தின் பிறகு மேற்படி செந்தில்வேல் எதிரிக்கு அவருடைய 4 காசோலைகள் மற்றும் 4 புரோ நோட்டுகளை திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அச்சமயம் செந்தில்வேல் எதிரியின் ஒரு காசோலை மற்றும் ஒரு புரோ நோட்டு தொலைந்துவிட்டதாகவும், அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டேன் என்றும் எதிரிக்கு வாய்மொழியாக உறுதி கூறியிருந்தார் என்றாலும் சரியல்ல.

12. நானும் செந்தில்வேலும் நண்பர்கள் என்பதால் மேற்படி செந்தில்வேல் எதிரியிடம் துர்லாபம் அடைவதற்காக வழக்கு காசோலை மற்றும் ஒரு புரோ நோட்டைக் கொடுத்து மோசடியாக இவ்வழக்கை என் மூலம் தாக்கல செய்துள்ளார் என்றால் சரியல்ல. வெற்று பிராமிசரி நோட்டை எதிரி கொடுத்த பிறகு எனது சட்ட அறிவிப்புக்கு பதிலாக எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் காசோலை மற்றும் புரோ நோட்டின் நகலை கேட்டபிறகு அவசர கதியில் புரோ நோட்டை நான்

பூர்த்திசெய்ததாகல்தான் அதன் தேதியை முன்னுக்கு பின் முறணாக வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையை கையொப்பத்தை தவிர பிற சங்கதிகளை நான் பூர்த்திசெய்துகொண்டேன் என்றால் சரியல்ல.

13. 20.12.2015 அன்று என் கைவசம் பணம் இல்லை என்று நான் கூறியுள்ள பட்சத்தில் 25.12.2015 அன்று ரூபாய் 7 லட்சம் எதிரிக்கு கடன் கொடுத்ததாகவும் கூறியுள்ள பட்சத்தில் இடைப்பட்ட நாட்களில் எவ்வாறு ரூபாய் 7 லட்சம் தொகையை திரட்டினேன் என்று எனது வழக்கில் கூறவில்லை என்றால் சரியல்ல, நான் 20.12.2015 அன்றுதான் எதிரிக்கு கடன் கொடுத்தேன். 25.12.2015 என்று தட்டச்சு பிழையாக உள்ளது.

14. 28.11.2016 தேதியிட்ட எதிரியின் மறுப்பு அறிவிப்பில் பிராமிசரி நோட்டு என்னால் போலியாக தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அது எதிரியின் வழக்கறிஞர் கூறியுள்ளார். அதன் பிறகு தாக்கல் செய்யப்பட்ட எனது புகார் மற்றும் பிரமாண பத்திரிக்கையில் மேற்படி தட்டச்சு பிழை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இரண்டாவதாக தாக்கல் செய்த எனது கூடுதல் பிரமாண பத்திரிக்கையிலும் தேதியை மட்டுமே 20.12.2015 என்று திருத்தம் செய்துள்ளேனே தவிர மேற்படி தட்டச்சு பிழை குறித்து எங்கும் குறிப்பிடவில்லை என்றல் தற்போது எனக்கு நினைவில்லை.

15. எதிரிக்கு நான் கடன் கொடுத்தபோது சாட்சிகள் யாரேனும் இருந்ததாக எனது புகார் மற்றும் ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்ததாக கூறப்படும் தேதியில் என்வசம் ரூபாய் 7 லட்சம் இருந்தது என்பதை நிரூபிக்கும் வகையில் எந்த ஆவணங்களையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

16. உண்மையில் எதிரிக்கு நான் சொன்ன தேதியில் கடன் கொடுத்திருந்தால் அச்சமயம் யார் சாட்சிகளாக இருந்தார்கள் என்று வழக்கில் கூறியிருப்பேன் என்றாலும், எனது கைவசம் ரூபாய் 7 லட்சம் இருந்ததற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும் எனவே புகார் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

17. எனக்கும் எதிரிக்கும் இடையே எந்த கடன் பரிவர்த்தனையும்

நடைபெறாததால் எதிரி எனக்கு கடன் தொகையை செலுத்த வேண்டிய கடப்பாடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனவே எதிரி மாற்றாவண சட்டப்பிரிவு 138-ன் கீழ் எந்த குற்றமும் புரியவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.